**செய்தி வெளியீடு எண்:527** **நாள்: 10.08.2017**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு, அரசாணை எண்.112, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 22.06.2017 மூலம் தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மேம்படுத்துலும்) சட்டம், 2016–ன் கீழ் தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மேம்படுத்துலும்) விதி 2017–னை அமல்படுத்தியுள்ளது. இந்த விதி எண்.3(1)–ன்படி, எந்த ஒரு கட்டிட உரிமையாளரும் தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யாமல் எந்த விளம்பரத்தையும் கொடுப்பதோ, சந்தைப்படுத்துவதோ, வீட்டைப் பதிவு செய்வதோ, விற்கவோ (அ) விற்க முயற்சி செய்வதோ (அ) எந்த முறையிலும் வீட்டையோ அல்லது மனையையோ முழுவதுமாகவோ (அ) பகுதியாகவோ வாங்குமாறு அறிவுறுத்துவதோ, தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) சட்டம், 2016–ன்படி குற்றமாகும். எனவே, கட்டிட உரிமையாளர் / மேம்பாட்டாளர் எவ்வொரு விளம்பரம் கொடுப்பதாக இருந்தாலும், தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) சட்டத்தின்படி பெற்றுள்ள பதிவு எண்ணை கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். இவ்விதிகள் நடைமுறைக்கு வந்த 22.6.2017–க்கு முன் முடிவடைந்த திட்டங்களுக்கு, பணி நிறைவுச் சான்று விவரம் அல்லது பதிவுச்சான்று பெறுவதிலிருந்து விலக்களிக்கக் கோரி உரிய திட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்த விவரங்களை குறிப்பிட வேண்டும்.

இக்குறிப்புகளை வீடு / மனை கடன் வழங்கும் நிதி நிறுவனங்களும் கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**